கல்வி மற்றும்
ஆய்வு செய்திகள்

செய்திமடல் NEWSLETTER

ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம் - மகரகம

2019 ஜனவரி - ஜூன்
தொகுதி இரண்டு, மடல் ஒன்று

பயன்தரு உரையாடலுக்கான
அழைப்பு

தேசிய கல்வி நிறுவகத்தினால் புதிதாக ஆரம்பிக்கட்டுள்ள Channel NIE எனும் வலைதள ஒளியலைவரிசை

தேசிய கல்வி நிறுவகத்தின் இலத்திரனியல் ஊடகத்துறை ஏனையத் துறைகளோடு ஒன்றிணைந்து, டிஜிடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி கலைத்திட்டத்துடன் தொடர்புடைய விசேடத் தலைப்புகளின் கீழ் கல்வி தொடர்பான காணொளி நிகழ்ச்சிகளை (Educational Videos) தயாரிக்கும் பணியில் ஈடுபட்டது.

10 வது பக்கத்திற்கு

விஞ்ஞானக்கல்வி பற்றிய கருத்தரங்கின் ஆய்வு முடிவுகள

கல்வி அமைச்சின் விஞ்ஞானப் பிரிவு மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் விஞ்ஞானத் துறை ஆகியன இலங்கை விஞ்ஞான அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். என் ரணசிங்ஹ அவர்களின் தலைமையில், 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதி "இலங்கையின் பாடசாலைக் கல்வி முறையில் விஞ்ஞானக் கல்வியின் எதிர்காலம் எவ்வாறானதாக அமைய வேண்டும்?" என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கு ஒன்றினை கல்வி அமைச்சில் ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது கல்வி அமைச்சு, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை விஞ்ஞான அபிவிருத்தி சங்கம், தேசிய கல்வியியற் கல்லூரிகள், மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் வலயக்கல்விக் காரியாலயங்கள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் விஞ்ஞானக் கல்வியுடன் தொடர்புடைய அதிகாரிகள் பலர் கலந்துக் கொண்டனர்.

கருத்தரங்கின் ஆரம்பத்தில் அழைப்பு விடுக்கப்பட்ட பேருரையாளர்களால் விஞ்ஞானக் கல்வியுடன் தொடர்புடைய சமகால முக்கியத்துவம் வாய்ந்த உரைகள் நிகழ்த்தப்பட்டதோடு அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இலங்கையின் கல்வித்துறையுடன் தொடர்புடைய புலமையாளர்களால் "விஞ்ஞானக் கல்வியுடன் தொடர்புடைய விசாரணை சார்ந்த பிரதிபலிப்பு" (A Critical Reflection on Science Education) எனும் தலைப்பில் குழுக் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

உள்ளே உள்ள பக்கங்களில்

03 கணித அடைவினை உயர் மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு அத்தியாவசியமான கற்றல் எண்ணக்கருக்களின் கீழ் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் கணித வினாப்பத்திரத்துக்கான ஒரு புதிய அணுகுமுறை

04 2020 ஆம் ஆண்டுக்கு அப்பால் பாடசாலைக் கலைத் திட்டத்தில் பௌத்த சமயப் பாடம் தயாரிக்கப்பட வேண்டிய விதம்

05 பட்டதாரிகளல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்.

07 பணிச் செயற்பாட்டு முகாமைத்துவம் - Event Managemant

09 பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி

11 கலாநிதி சி. டப்ளியூ. டப்ளியூ கன்னங்கரா அவர்களின் 30 வது நினைவுப்பேருரை

12 புதியச் செய்திகள்

இக்கருத்தரங்கின் மற்றுமொரு முக்கியமான அங்கமாக, வருகைத் தந்திருந்த புலமையாளர்களிடம் இலங்கையின் விஞ்ஞானக் கல்வியுடன் தொடர்புடைய எதிர்கால மறுசீரமைப்புக்களின் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் தொடர்பில் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் விஞ்ஞான அபிவிருத்தி சங்கத்தின் அதிகாரிகள் கூட்டிணைந்து ஏழு கருப்பொருள்களின் கீழ் தயாரித்த வினாக்கொத்தினூடாக வினாக்கள் முன்வைக்கப்பட்டது. அவ்வேழு தலைப்புக்களின் கீழும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் சாராம்சம் கீழ்வருமாறு.

விஞ்ஞானப் பாடத்தினூடாக நிறைவு செய்து கொள்ள வேண்டிய கற்றல் பேறுகள்.

எதிர்கால கல்வி மறுசீரமைப்புகளில், பிரதானமாக விஞ்ஞானப் பாடம் தொடர்பில, கற்றற்பேறுகள் சிலவற்றை இனங்கான வேண்டியுள்ளது. அவ்வாறான கற்றற்பேறுகள் வருமாறு

- அத்தியாவசிய கற்றற் பேறுகள் மற்றும் விரும்பிற்குரிய கற்றல் பேறுகள் என கற்றற் பேறுகள்வெவ்வேறாக அடையாளங்காணப்பட வேண்டும்.
- ஒவ்வொரு பிரதான மட்டங்களுக்கும் (உ.தா: 1 - 5 தரங்கள், 6 - 9 தரங்கள், 10 - 11 தரங்கள் என) வெவ்வேறாக இனங்காணப்படல் வேண்டும்.
- தேசிய இலக்குகளை அடைந்துகொள்ளவும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளவும் இயலுமான வகையில் உருவாக்கப்பட வேண்டும்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றும் நோக்கிலும் 21 ஆம் நூற்றாண்டுக்குரிய இலக்குகளை எய்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

விஞ்ஞானப் பாடத்தின் உள்ளடக்கம்

விஞ்ஞான பாடத்தின் உள்ளடக்கத்தினை தெரிவு செய்யும் போது,

இனங்காணப்பட்ட கற்றற்பேறுகளின் அடைவை உறுதிப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும்.

அவ்வுள்ளடக்கமானது ஏனைய பாடங்களுடன் கிடையானதும் நிலைக்குத்தானதுமான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும்.

வேறு நாடுகளில் நடைமுறையிலுள்ள பாடசாலை விஞ்ஞானக் கலைத்திட்டங்களுக்கு இணையாக உருவாக்கப்பட வேண்டும்.

பிரதேச ரீதியான வேறுபாடுகளுக்கு இசைவுறும் வகையில் சிறு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு மாகாண, வலய மற்றும் பாடசாலை உயர்மட்ட அதிகாரிகளுக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட வேண்டும்.

விஞ்ஞானத்தின் புதிய பாடத்துறைகள் தொடர்பில் மாணவன் இற்றைப்படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும்.

அதேபோல் விஞ்ஞான ரீதியான எண்ணக்கருக்கள் விருத்தி யடையும் வகையில் ஆரம்ப கலைத்திட்டம் நவீனமயப் படுத்தப்பட வேண்டும்.

கற்பித்தல் முறையியல்

கற்றல் கற்பித்தல் செயன்முறையானது, விஞ்ஞான செயன்முறைத் திறன்கள் (Science process skills) விருத்தியடையும் வகையில், கணிதம், தொழிநுட்பவியல் போன்ற பாடங்களினூடாக பெறப்படும் அறிவு மற்றும் திறன்களை ஒருங்கிணைத்துக் கொண்டு விஞ்ஞான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும். அதேபோல் விஞ்ஞான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களின் மென்திறன் விருத்திக்கும், ஆளுமை விருத்திக்கும் சந்தர்ப்பம் காணப்பட வேண்டும்.

கலைத்திட்ட சாதனங்கள்

பாடத்திட்டத்திற்கு புறம்பாக விரிவான விளக்கத்துடன் கூடிய ஆசிரியர் வழிகாட்டியொன்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், விஞ்ஞான பாடத்துக்கான செயன்முறைச் செயற்பாடுகளடங்கிய கைந்நூல் ஒன்றும் வழங்கப்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்டது.

மாணவர் கணிப்பீட்டு மதிப்பீட்டு செயன்முறை

விஞ்ஞானப்பாடத்தின் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பாடசாலை மட்டக்கணிப்பீட்டுச் செயன்முறைத் தொடர்பில் அதிகளவு முன்னுரிமை வழங்குவதன் முக்கியத்துவமும் தேசிய மட்ட கணிப்பீட்டுக்காக செயன்முறைப் பரீட்சையினை பயன்படுத்துவதன் முக்கியத்துவமும் சுட்டிக்காட்டப்பட்டது.

உட்கட்டமைப்பு வசதிகள்

வளப்பற்றாக்குறைகளுடன் கூடிய விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் இருக்கின்றமை பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றமையால் அவற்றை இற்றைப்படுத்த வேண்டிய தேவை நிலவுகின்றது. தகவல் தொழிநுட்பம் மற்றும் விஞ்ஞானக் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் ஒருங்கிணைப் பிற்காக போதியளவு வசதிகள் பாடசாலைகளுக்கு வழங்க வேண்டியுள்ளது.

ஆசிரியர் கல்வியும் அபிவிருத்தியும்

21ஆம் நூற்றாண்டுக்குரிய திறன்களுடன் கூடிய விஞ்ஞான ஆசிரியர்களை உருவாக்குவதில் தற்போதுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து போதியளவு பங்களிப்பு கிடைக்கப்பெறவில்லை. விஞ்ஞானப் பாடத்தைக் கற்பிப் பதற்கான விசேடப்பயிற்சிகள் பெற்ற போதுமானளவு ஆசிரியர்கள் தற்பொழுது சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. ஆசிரியர்களின் அபிவிருத் திக்கான போதியளவு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அதேபோல் கல்வியியற் கல்லூரிகளில் விஞ்ஞானப்பாட ஆசிரியப் பயிற்சி பாடநெறிகள் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.

கல்விக்கொள்கைகளும் நடைமுறையும்

விஞ்ஞானப் பாடநெறியினை பிரயோக ரீதியானதாக நடைமுறைப்படுத்துவதற்கு தற்போது நிலவும் கல்விக் கொள்கைகளை இற்றைப்படுத்துதல் இன்றியமையாததாகும். பாடசாலையினை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயன்முறையினை வலுப்படுத்தும் வகையில் கொள்கைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும். விஞ்ஞானப் பாடநெறி யினை மேலும் பிரயோக ரீதியானதாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை பாடசாலை மட்டத்திலேயே கொள்வனவு செய்துகொள்ளக்கூடிய வசதி-களைக் கொண்டதாக சுற்றுநிருபங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். விஞ்ஞானப்பாட ஆசிரியர்களின் பரம்பலில் காணப்படும் முரண்பாட்டினை இழிவளவாக்குவதற்கான கொள்கைத் தீர்மானங் களை மேற்கொள்ள வேண்டும். பெறுபேறுகளை உயர்த்துவதை முதன்மைப்படுத்திய மேற்பார்வையினை விடவும் மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்ட மேற்பார்வையின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு, விஞ்ஞானக்கல்வியின் எதிர்காலத்தை தெளிவா-னதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கு தேவையான ஆய்வுகள் சார்ந்த அடிப்படையினை உருவாக்கிக்கொள்வதற்கு உதவியாக அமைந்தது.

கணித அடைவினை உயர் மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு தேவையான கற்றல் எண்ணக்கருக்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் கணித வினாப்பத்திரத்துக்கான ஒரு புதிய அணுகுமுறை

கணிதம் சகலத்துறைகளிலும் வியாபித்துள்ள ஒரு ஊடகமாகும். அது எம் அனைவரினதும் வாழ்வின் ஒரு அங்கமாகும். அவ்வாறே அது ஒரு தொடர் ஒழுங்கு செல்வாக்குடைய, ஆக்கபூர்வ தன்மையை முன்னெடுக்கின்ற, தர்க்க ரீதியான சிந்தனைக்கு துணைபுரியும் உளக்கோளத்தின் விருத்தி மீது தங்கியிருக்கின்ற, உயர் உள ஆற்றல்களின் விருத்திக்கு தூண்டுதலாயுள்ள ஒரு பாடமாகும். நாளாந்த நடவடிக்கைகளின்போது நாம் அறிந்தோ அல்லது அறியாமலோ நித்தமும் கணிதத்தைப் பயன்படுத்தி வருகின்றோம்.

பரீட்சையின்போது மட்டுமல்ல நாளாந்த வாழ்வில் வெற்றிகளை அண்மித்திடவும் கணிதம் அத்தியாவசிய மாகின்றது. கணிதத்தினால் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாது இருப்பினும் கணிதமானது கருத்துக்களை வெளியிடக்கூடிய ஒரு மொழியாகும். கணிதத்திலுள்ள பிரபல்யமான குணாம்சம் அதிலுள்ள கருத்து நிலைத் தன்மையாகும்.

கணிதம் கற்பிக்கும்போது ஆசிரியர்கள் கணிதத்தின் இந்த இயல்பினைப் பற்றி ஆழமான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டியதோடு, அதற்குப் பொருத்தக்கூடியதாக கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்த வேண்டும். அத்தகைய கற்பித்தல் முறைகள், மாணவர்களது முதிர்ச்சி மற்றும் அடைவு மட்டங்களுக்கேற்ப, கருத்து நிலையான எண்ணக்கருக்களை ஒன்று திரட்டிய எண்ணக்கருக்களாக பரிமாற்றம் செய்து மாணவர்களிடையே பிரபல்யமான உளவியல் கோலங்களைக் கட்டியெழுப்புவதில் வெற்றி பெற முடியும்.

க.பொ.த. (சாதாரண தர) மட்டத்தின்போது மாணவர்கள் பயில வேண்டிய கருப்பாடங்களிடையே கணித பாடம் முதன்மைப் பெறுகிறது. எனவே சாதாரண தரப் பரீட்சையில் கணித பாட வினாத்தாளுக்கு தோற்றுகின்ற மாணவர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை இனங்கண்டு, மாணவர்களின் கணித அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக கணித பாட உள்ளடக்கத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது பற்றிய பரிந்துரையை முன்வைப்பதற்கு 2014 ஆம் ஆண்டிலே கல்வி அமைச்சினால் விசேட ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. சகல மாணவருக்கும் பொருந்தும் விதத்தில் இனங்கண்டு கொள்ளப்பட்ட அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களின் துணையோடு மாணவர்களது கணித அடைவினை உயர்த்துவதில் அவ்வறிக்கையில் (க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, மாணவர்களின் கணித செயல் அடைவினை உயர்த்துவதற்கான உரிய பரிந்துரைகளை முன்வைப்பதற்காக விசேட ஆலோசனைக் குழுவினால் கல்வி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்ட அறிக்கை) விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவினால் கணித செயல் அடைவினை உயர்த்துவதற்காக பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

01
இரண்டாம் நிலைக் கல்விக்காக முன்வைக்கப்பட்ட கணித பாடத்தின் பாட உள்ளடக்கமானது,

• கல்விசார் அல்லது ஆய்வுசார் கணிதத்துக்கு சமமானதாக இல்லாதிருத்தல்.
• அறிவுமிக்க பிரசையாக வாழ்வதற்குத் தேவையான வாழ்க்கைத் திறன்களின் அபிவிருத்தியின் பொருட்டு துணைபுரிவதாக இருத்தல்.
• ஏனைய பாடங்களைக் கற்பதற்கு துணைபுரியும் ஒரு பாடமாக விளங்குதல்.
• மிகவும் பயன்தரும் கற்றலுக்கு ஏதுவாகும் விதத்தில் முன்னுரிமை ஒழுங்கு வரிசைக்கிணங்க கணித எண்ணக்கருக்களை அறிமுகம் செய்தல்.

02
கணித அறிவினைக் கொண்ட பிரசையாக கருதவும், அனைவராலும் ஓர் கணிதத்தைக் கற்பதற்குள்ள நிலைமைக்கு ஏற்ற பொருத்தமான மாற்றுவினைத் திவொன்றாக கணிதப் பாடத்துக்கு தொடர்புடையதாகவும் 10 மற்றும் 11 ஆம் தரங்களில் மாணவர்கள் கற்க வேண்டிய அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களை (Essential learning concepts) அறிமுகப் படுத்துதல் வேண்டும். அவை அவர்களுக்கு கணிதத்தின் சமூகப் பயன்பாட்டை விமர்சன ரீதியாக கண்டறிய செய்யத் துணையாக அமைகின்றது.

03
அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களுக்குரிய பிரச்சினைகளைத் தீர்க்கும் முறையான மற்றும் எண்ணக்கரு சார்ந்த அறிவை முன்மாதிரியாகக் கொள்வதற்கு முடியுமாகும் விதத்தில் மாணவர்கள் அடைந்து கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த அடிப்படையான அடைவு மட்டம் (Basic Achievement Level - BAL) தொடர்பாக உடன்பாட்டுக்கு முன்வர வேண்டும். இங்கு அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்கள் அடிப்படையில் பாட உள்ளடக்கம் தீர்மானிக்கப்படுவதோடு ஆகக்குறைந்த அடைவு மட்டமொன்றின் வழியாக பிள்ளைகளை மதிப்பீட்டுக்குள்ளாக்கப்படல் வேண்டும்.

04
மேற்கூறப்பட்ட பரிந்துரைகளுக்கு இணங்க, க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் கணித பாட வினாப்பத்திரத்தின் ஒன்றுதிரட்டலானது மீள்கட்டமைப்பு செய்யப்படல் வேண்டும்.

• கணிதம் பகுதி – I வினாப்பத்திரம் இரண்டு மணித்தியால கால வரையறைக்குட்படும் விதத்தில் அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களை அளவிடுவதாக சுருக்கமான விடைகளுடன் கட்டமைக்கப்பட்ட வினாப்பத்திரமொன்றாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். இறுதி பெறுபேற்றின் 50% பங்களிப்பொன்றை அது காட்டல் வேண்டும்.
• உயர் சித்தியொன்றை எதிர்பார்க்கின்ற மற்றும் உயர் கல்விபின்தொடர்வதற்கான கல்விசார் திறன்களை அதிகமாகக் கொண்ட மாணவர்களை இலக்கு வைத்து II ஆவது வினாப்பத்திரத்தை விருத்தி செய்தல் வேண்டும்.
3 மணித்தியால கால எல்லைக் குட்பட்டதாக கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்களை உள்ளடக்கிய இவ் வினாப்பத்திரமும் இறுதிப் பெறுபேற்றின் 50% பங்களிப்பினைக் காட்ட வேண்டும்.

2020 ஆம் ஆண்டுக்கு அப்பால் பாடசாலைக் கலைத் திட்டத்தில் பௌத்த சமயப் பாடம் தயாரிக்கப்பட வேண்டிய விதம்

பண்பாடுகள் நிறைந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவது ஒரு சமூகப் பொறுப்பாகும். பாடசாலைக் கலைத்திட்டத்தினுள் அதற்காகப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடமென்பது ஒரு சுலபமான விடயம் அல்ல. சமய பாடத்தைச் சேர்த்துக் கொள்வது மட்டும் இதற்குப் போதுமானதல்ல. ஒரு பாடமாக சமயத்தைக் கற்பிப்பதற்கு பதிலாக மிகவும் பிரயோக ரீதியான அனுபவங்களை அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து, வாழ்க்கை தொடர்பான விளக்கத்தை விரிவாக்குகின்ற, அம்சமாக, சமயத்தை பிள்ளைகளை அணமிக்கும் படி செய்ய வேண்டியுள்ளது. இதற்காக தற்போது சமய பாடம் பாடசாலைக் கலைத்திட்டத்தில் செயலுரு பெற்றுள்ள விதம், அதன் அடைவு நிலைமைகள் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய அவசியத்தின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதிதாகத் தயாரிக்கப்படுகின்ற பாடசாலைக் கலைத் திட்டத்தில் சமயம் என்ற மட்டில் 6 - 11 வரையான தரங்களில் பௌத்த தர்மப் பாடத்தைக் கற்பிப்பதற்கு பொருத்தமான முறை, பாட உள்ளடக்கம் தயாரிக்கப் பட வேண்டிய விதம் மற்றும் அதற்குரியதாக முன்வைக்கக் கூடிய ஆலோசனைகளை இனங்காணுதலைக் குறிக்கோளாகக் கொண்டு தேசிய கல்வி நிறுவகத்தினால் ஆக்கபூர்வமான பரிசீலனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இக்கற்கையானது, இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்குமுரிய 42 வலயங்களில் 6 –11 வரையான தரங்களிலுள்ள 470 மாணவர்கள், 250 ஆசிரியர்கள் மற்றும் 300 பெற்றோர்களைத் தொடர்புபடுத்திக் கொண்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பௌத்த தர்மப் பாடத்தின் பாடக் குறிக்கோள்கள் மற்றும் தேர்ச்சி மட்டங்களை அணமித்திட, தற்போது வார மொன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இரண்டு பாட வேளைகள் போதுமானதாக இல்லையென்பதுவும், அப்பாட வேளைகளின் எண்ணிக்கையை ஐந்து வரை அதிகரிக்க வேண்டு மென்பதுவும் முன்மொழியப்பட்டுள்ளது. இவ்விடயம் பற்றி, "இலங்கையின் பொதுக் கல்வி பற்றிய தேசிய கொள்கைக் கான முன்மொழிவுகள் 2016" எனும் நூலில் உள்ளடக்கப்பட் டுள்ள கூற்றின் துணையோடு மேலும் விளங்கிக் கொள்ளலாம். அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இலங்கையின் கலாசார மற்றும் ஒழுக்கவியல், அவற்றின் பயன்தரு பயன்பாடுகளை மாணவர்க்கு அறிமுகப்படுத்துதல் ஆரம்பப் பிரிவின் தொடக்கத்தோடு பாடசாலையில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும். இது பிரதானமாக சமய பாடத்தினூடாக் நிறைவேற்றப்பட வேண்டு மென்பதும், சமய பாட உள்ளடக்கம் பிரயோக ரீதியான அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு பாடமாக்கப்பட வேண்டு மென்பதுவும் இங்கு முன்மொழியப்பட்டுள்ளது. கலாசாரம் மற்றும் ஒழுக்க விழுமியங்களைப் பயன்தரும் விதத்தில் அறிமுகப்படுத்தி பிரயோக ரீதியாக ஈடுபடுத்தக்கூடிய ஒரு பாடமாக பௌத்ததர்மப் பாடத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகள் போதுமானதாக இல்லாதபடியால், அப்பாடத் தினூடாக ஒழுக்க விழுமிய விருத்திக்காக அதிக பாட வேளைகளை ஒதுக்குவது பொருத்தமான தென்பதும் இங்கு வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறே தேசிய கல்வி நிறுவகத்தின், ஆய்வுகள் அபிவிருத்தித் துறையினால் மேற்கொள்ளப்பட்ட "கல்வி மறுசீரமைப்பு மற்றும் அநுகோமமைந்த கருத்து விசாரணை - 2018" எனும் ஆய்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளதன் படி பௌத்ததர்மம் கருப்பாடங்களுள் ஒன்றாகவும், வாரமொன் றிற்கு ஐந்து பாடவே-ளைகளை உள்ளடக்கியதாகவும் மாற்றிய மைத்தல் பொருத்தமாகுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே எதிர்காலத்தில் சமயப் பாடங்களுக்குரிய பாடசாலைக் கலைத்திட்டத்தினைத் தயாரிக்கும் போது கீழ்க் குறிப்பிட்ட விடயங்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது.

- சமயம் மற்றும் ஒழுக்க விழுமியப் பாடத்தினை பிரயோக ரீதியாக நடைமுறைப்படுத்தக்கூடிய விதத்தில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.
- சமயம் மற்றும் ஒழுக்க விழுமியப் பாட உள்ளடக்கத் துடன் ஏனைய சமயங்கள் மற்றும் கலாசாரங்களைப் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.
- சமயம் மற்றும் ஒழுக்க விழுமியப் பாடத்துக்காக அதிக பாடவேளைகளை ஒதுக்குவது மகிழ்ச்சிக்குரியதாயினும் அவ்வாறு அதிகரிக்கப்படும் பாடவேளைகளின் எண்ணிக்கை யைப் பூரணப்படுத்துவதற்காக ஏனைய பாடங்களின் பாட வேளைகளைக் குறைக்கக்கூடாது.
- ஞாயிறு மறைப்பாடசாலை முறை கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

மேலும்,சமயங்கள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் திணைக்களத் தினூடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் வெளிப்படுத்தல்களி டையே, 6 – 11 தரங்களுக்கான ஆசிரியர் வழிகாட்டிகள் உயர்தரத்தில் எழுதப்பட்டுள்ளமைப்பற்றியும், பாட நூல் களின் நிறைவு சிறந்த நிலையில் காணப்படுகின்றமை பற்றியும் போலவே ஆசிரியர் வழிகாட்டிகளில் இடம் பெற்றுள்ள கற்றல் பேறுபேறுகள் விளக்கமாக எழுதப் பட்டுள்ளமை பற்றியும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் 88% வீதத்தினர் பாராட்டினை தெரிவித்துள்ளார்கள். பாட உள்ளடக்கத்திலுள்ள புத்த சரிதங்கள், சாசன வரலாறு மற்றும் பௌத்த கலாசாரம் ஆகிய துறைகளுக்குரிய பாடங்கள் மீது 94% மான மாணவர்கள் தமது உயர் விருப் பினை வெளிப்படுத்தியுள்ளனர். இருப்பினும் குறிப்பிட்ட சில தரங்களில் குறித்த சில பாடங்களுக்கான பாட உள்ளடக்கம் முன்னரிலும் பார்க்க அதிகரித்துள்ளமையை 91% மாணோர் வெளிப்படுத்தியுள்ளனர். பௌத்த சமயப் பாடம் தொடர்பாக கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு நேரம் மான மணப்பாங்குகள் இல்லாதிருப்பதுவும் கற்பித்தல்

நடவடிக்கைகளின்போது பெரும்பாலான ஆசிரியர்கள் அறிவை மட்டும் ஆசிரியத்துக்கு எடுத்துக் கொள்வதோடு பிரயோக செயற்பாடுகள் மீது எதுவித அக்கறையும் கொள்ளாதிருக்கின்றமைப் பற்றி மாணவர்களது கருத்துக்களில் உள்ளடங்குகின்றன. இதற்கு முக்கிய காரணமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது யாதெனில் பௌத்ததர்மப் பாடத்தைக் கற்பிப்பதற்காக போதியளவு பாட அறிவுள்ள, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமையும் மற்றும் பெரும்பாலான பாடசாலைகளில் புத்ததர்மம் பாடத்துக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள் உரிய பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆர்வமும் திறமையும் காட்டுகின்ற ஆசிரியர்களாக இல்லாமையும் ஆகும்.

மாணவர்களின் விழுமியப்பண்புகள் அபிவிருத்தியடையக்கூடிய சகவாழ்வு பற்றிய எண்ணக்கருவை உறுதிப் படுத்துகிற. ஒழுக்க விழுமியம் உருவாகின்ற விதத்தில் பாட உள்ளடக்கம் மாற்றமடைய வேண்டுமென்பதோடு பிரயோக செயற்பாடுகளுக்காக அதிக இடம் வழங்கப்பட வேண்டுமென்பதும், நாளாந்த வாழ்க்கைக்குப் பொருந்துகின்ற விதத்தில், பாடப் புறக்கிருத்திய மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்பதுவும் இதன்படி உறுதியாகின்றன. பாடநூல்களில் பாடவிடயங்கள் மறுசீரமைப்பு செய்யப்படாததோடு 10ஆம், 11ஆம் தரங்களுக்காக செயல்திட்ட அடிப்படைக் கற்றல் முறையை உள்ளடக்க வேண்டியுள்ளது. பாட விடயங்கள் பாடவேளை அளவிற்குப் பொருந்தும் விதத்தில் திருத்தம் செய்யப் படவேண்டுவதோடு, பாடநூல்களில் ஏதேனும் பாடநூல்களை எழுதும்போது (பௌத்த மறையில் அடிப்படைக் கற்பித்தல்) எளிமையான மொழி நடையைப் பயன்படுத்துதல் வேண்டும். பாடங்களின் முடிவில் அனைத்துக் கடினப்பதங்களுக்குமான கருத்தை எளிமையான மொழியில் குறிப்பிடுவதனால் மாணவர்க்கு சுயமாகவே கற்றுக் கொள்ள அது துணைபுரியும்..

பௌத்த தர்மம் தொடர்பாக பாடநூல்களை எழுதும்போது பாட உள்ளடக்கத்தில் ஏனைய மதங்களின் அடிப்படை அறிமுகங்களுடன் சமய விழாக்கள் ஆகியவற்றை உள்ளடக்குவதனால் சமூகப் புரிந்துணர்வை கட்டியெழுப்புவதற்கும் ஒருவர் மீது ஒருவர் மரியாதை செலுத்தவும் ஏனைய மதக் கருத்துக்களை பொறுமையுடன் செவிமடுக்கிற சமூக புரிந்துணர்வு எண்ணக்கருவை பிள்ளைகளிடம் உருவாக்கவும் இயலுமாயிருக்கும். புத்த தர்மம் பாடத்தின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையினுள் பன்முக நுண்மதிக் கோட்பாடு மற்றும் ஆக்க சிந்தனைகளை உருவாக்கும் விதத்தில் ஆசிரிய வழிகாட்டல் மற்றும் தயாரிக்கும் போது தயாரிப்பில் பாட அடைவினைப் போன்றே பிள்ளைகளிடம் வாழ்க்கை நற்பழக்கங்களையும் அபிவிருத்தி செய்திடவும் வாய்ப்பு கிட்டுகிறது.

பட்டதாரிகளல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்.

கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் முக்கியமான பணியினை ஏற்பவர்கள் ஆசிரியர்களாவர். அது ஆசிரியரின் பிரதான பணியாக விருந்தாலும், சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்தும் பிரதான சக்தியான ஆசிரியர் என்பவர், சிக்கலான பல வகிபாகங்களின் தொகுப்பாகும். ஆதலால் ஆசிரியர் தனது சேவையினை வினைத் திறனான வகையில் முன்னெடுத்துச் செல்வதற்கு சிறந்த தொழிற் பயிற்சியைப் போலவே ஆலோசனை வழிகாட்டலும் தேவைப்படுகிறது. ஆகையால் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பட்டதாரிகளல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பாடநெறி யொன்றினை தேசிய கல்வி நிறுவகத்தின், ஆசிரியர்க் கல்வி மற்றும் மாற்றுக்கல்விக்கான பீடத்திற்குரிய நிறுவன அபிவிருத் தித்துறை முன்னெடுத்துச் செல்கிறது. இதற்கான நிதி கல்வி அமைச்சினால் வழங்கப்படுவதோடு, தற்பொழுது இந்தப் பாடநெறி நாடளாவிய ரீதியில் எட்டு பிரதேச நிலையங்களில் 747 ஆசிரியர்களுக்காக நடாத்தப்படுகின்றது.

பாடநெறி நடைபெறும் பிரதேச நிலையங்கள்

1. அநுராதபுரம் - ஆசிரியர் வள நிலையம், அநுராதபுரம்.
2. குருணாகல்- ஆசிரியர் வள நிலையம், குருணாகல.
3. மஹரகம - தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.
4. மொணராகலை - ஆசிரியர் வள நிலையம், மொணராகலை.
5. கண்டி - மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி, பொல்கொல்ல.
6. பேராதெனிய - பேராதனைத் தேசிய கல்வியியற் கல்லூரி, பேராதெனிய.
7. பண்டாரவெல - ஊவா தேசிய கல்வியியற் கல்லூரி, பிந்துனுவெவ.
8. இரத்தினபுரி - ருவண்புர தேசிய கல்வியியற் கல்லூரி, கஹவத்தை.

ஆரம்பகட்ட ஆசிரியப் பயிற்சியினை நிறைவு செய்யாது பாடசாலைத் தொகுதியில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் 19.3 ஆவது உபபிரிவின் படி ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்பதற்கான அடிப்படை தகுதிகளை நிறைவுசெய்து கொள்வதனை இப்பாடநெறி மேற்கொள்கிறது. தற்பொழுது நான்கு வகையான பாடநெறிகள் நடைபெறுகின்றன.

- ஆரம்பக்கல்விப் பாடநெறி (சிங்கள மொழி மூலம்)
- ஆரம்பக்கல்விப் பாடநெறி (தமிழ் மொழி மூலம்)
- மேலைத்தேய சங்கீதப் பாடநெறி (ஆங்கில மொழி மூலம்)
- ஆங்கிலப் பாடநெறி

இப்பாடநெறியானது, கீழ்காணப்படும் நான்கு துறைகளின் கீழ் கருத்தரங்குகள், விரிவுரைகள், ஒப்படைகள் மற்றும் குழுச்செயற்பாடுகள் ஊடாக வார இறுதி நாட்களிலும் பாடசாலை விடுமுறை தினங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது.

1. தொழிற்பாடத் துறை
2. விசேடப்பாடத் துறை
3. பொதுப் பாடத் துறை
4. கல்வி நடைமுறைகள் (பிரயோக ரீதியான ஆசிரியர் பயிற்சி)

தொழிற் பாடத்துறை, பொதுப்பாடத் துறை மற்றும் கல்வி நடைமுறைகள் போன்ற பாடத்துறைகளை பயிலுனர்கள் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டி இருப்பதுடன், விசேட பாடத் துறையினை தமது பதவிக்கேற்ப தெரிவு செய்து கொள்ள முடியும்.

- தொழிற் பாடத்துறையின் கீழ் கல்வி உளவியல், கல்வி மூலத்தத்துவம் மற்றும் பாடசாலை முகாமைத்துவம் மற்றும் கல்வி அளவீடும் மதிப்பீடும் போன்ற விடயங்கள் உள்ளடங்கும்
- விசேப் பாடத்துறையின் கீழ் ஆசிரியர்களின் பிரதான பாடமும் இரண்டாவது பாடமும் உள்ளடங்கும்.
- பொதுப் பாடத்டதுறையின் கீழ் முதலாம் மொழி (தமிழ்/ சிஙகளம்), சுகாதாரமும் உடற்கல்வியும், அழகியல் (சித்திரம்/ நடனம் / சங்கீதம் / நாடகம்), தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம், ஆங்கில மொழி மற்றும் இரண்டாவது தேசிய மொழி (தமிழ்/ சிஙகளம்) போன்ற பாடங்கள் உள்ளடங்கும்.
- கல்வி நடைமுறைகள் அல்லது கற்பித்தல் பயிற்சியானது இரு கட்டங்களாக இரண்டு காலப்பகுதிக்குள் செயற் படுத்தப்படும்.

பாடநெறியின் கணிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கை உள்ளக தொடர் மதிப்பீடு மற்றும் வெளிவாரியான இறுதி மதிப்பீடு என இரண்டு விதமாக இடம்பெறும். உள்ளக மதிப்பீடானது ஆசிரியர் கலாசாலைகளுக்கான கணிப்பீட்டு நியமங்களை(2010) அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுவதோடு, வெளிவாரியான மதிப்பீடுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்கத்தினால் விசேடப் பாடத்துறையின் ஒவ்வொரு பாடங்களுக்காகவும் நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்தினதும் வெளிவாரிப்பரீட்சைப்புள்ளிகளின் 60% மும், உள்ளகப் பரீட்சைப் புள்ளிகளின் 40%மும் சேர்க்கப்பட்டு உரிய பாடத்துக்கான புள்ளி தீர்மானிக்கப்படும்.

பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பயிலுனர்களுக்கு "ஆசிரியப் பயிற்சி சான்றிதழ்" வழங்கப்படுவதோடு, அது இலங்கை ஆசிரிய சேவையின் 3 – 1 (ஆ) தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவதற்கான தகுதி யினைக் கொண்டிருக்கும்.

ஆசிரியர் தமது தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைத் தொழிற்றகைமைகளை பெற்றுக்கொள்வதற்கு மாத்திரம் இப்பாடநெறியினை வரையறுக்காது, ஆசிரிய மாணவர்களின் ஆக்கத்திறன் மற்றும் ஒற்றுமையினை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் ஆசிரியர்களை கல்வியின் அடிப்படையாகக் கருதி அவர்களின் பல்வகை ஆற்றல்களை மேம்படுத்தி, அவர்களை அறிவினை வழங்குவராக மட்டுமன்றி புத்தாக்கங்களை படைப்போராகவும், சமூக மாற்றத்தின் ஆணிவேராகவும் அபிவிருத்தி செய்வதற்கான தேசியப் பணிக்கு, தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்தித் துறை தலைமைத்துவத்தை வழங்கியுள்ளது.

பதின்மூன்று வருடங்கள் உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழுள்ள இருபத்தாறு தொழிற்பாடங்களில் ஒரு பாடமாக பணிச்செயற்பாட்டு முகாமைத்துவம் முதன்முறையாக பாடசாலைக்கல்வி முறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நவீன விஞ்ஞான மற்றும் தொழிநுட்பப் போக்கிற்கு ஏற்ப சமூக ரீதியாக ஏற்படுகின்ற மாறுதல்களுக்கு இணையாக பணிச் செயற்பாட்டு முகாமைத்துவம் ஒரு பாடமாக விருத்தியடைந்துள்ளது.

இலங்கை மற்றும் உலக வரலாற்றின் மீது கவனம் செலுத்துகையில் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு மற்றும் ஆன்மீகத் துறைகளுடன் தொடர்புறுகின்ற பணிச் செயற்பாட்டு முகாமைத்துவம் பற்றியத் தகவல்கள் தொன்மை இலக்கியங்கள், தொல்பொருளியல் சான்றுகள் மற்றும் புராணக்கதைகளில் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. வெள்ளரச மரக்கிளை இலங்கைக்கு கொண்டு வரப்படல், திரிபிடகம் நூலுருவாக்கம் பெறுதல், தலாதா பெரஹரா போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் மற்றும் தற்காலத்தில் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வு ஆகியவற்றினை இதற்கு உதாரணமாக எடுத்துக்காட்டலாம். ஆரம்பக் காலத்தில் இவற்றை 'பணிச்செயற்பாட்டு நிகழ்வுகள்' எனும் பெயரில் குறிப்பிடாவிட்டாலும், நடைமுறையில் அது ஒரு தொழிற்றுறையாக விருத்தியடைவதற்கிருந்த சூழ்நிலைகளோடு பணிச்செயற்பாட்டு முகாமைத்துவம் ஒரு கைத்தொழிலாக வளர்ச்சியடைந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் இருந்து பணிச்செயற்பாட்டு முகாமைத்துவம் உலகலாவிய ரீதியில் ஓர் கைத்தொழிலாக ஆரம்பமானாலும், அது இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் அறுதியரைப்பகுதியிலிருந்தே நடைமுறைக்கு வந்தது. தற்காலத்தில் பணிச் செயற்பாட்டு முகாமைத்துவம் பல்வேறு துறைகளுடன் இணைந்த ஓர் வலையமைப்பாக காணப்படுகிறது.

- வழங்கல் முகாமைத்துவம் Logistic Management
- சந்தைப்படுத்தல் Marketing
- தகவல் தொழிநுட்பம் Infomation Technology
- உலகமயமாக்கல் Globalization

இதனூடாக பணிச்செயற்பாட்டு முகாமைத்துவக் கைத்தொழில் புதிய போக்கில் வளர்ச்சியடைந்துவருகின்றமையைக் கண்டுகொள்ளலாம். அதன்படி அனேகமானோர் தற்போது பிறந்தநாள் வைபவம் தொடக்கம் ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வு வரையான பல்வேறு நிகழ்வுகளை உயர்தரமான நிலையில் முன்னெடுத்துச்செல்லும் நோக்கில் அவ்வாறான நிகழ்வுகளை தொழில் வாண்மைத்துவம் மிக்கவர்களைக் கொண்டு ஒழுங்கமைக்க முற்படுகின்றனர். இதனால் பணிச்செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான பல்வேறு சேவைகளை வழங்குவதில் சிற்றளவு மற்றும் பேரளவு நிறுவனங்கள் (Event Companies) தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் (சர்வதேச அமைப்புக்கள் -Event Organization) தோற்றம் பெற்றுள்ளன.

சமகாலத்தில் அமெரிக்கா, ஜர்மனி, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் பல்வேறு வழிகளில் இப்பணிச்செயற்பாட்டு முகாமைத்துவத்தை ஓர் கைத்தொழிலாக முன்னெடுத்துச் செல்வதனால் அவை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டுள்ளன. இந்நாடுகள் பணிச்செயற்பாட்டினை மேற்கொள்கின்றமையால் சுற்றுலா மையங்களை தெரிவுசெய்யும் போது சுற்றுலாப்பயணிகள் இவற்றின் மீது அதிக நாட்டம் கொள்கின்றனர். இந்நிலமை சுற்றுலாக் கைத்தொழிற்றுறை விருத்தியடைவதில் பெருமளவு செல்வாக்கு செலுத்தியுள்ளது. தற்காலத்தில் இக்கைத்தொழிற்றுறை விசேடமான துறைகளை அடிப்படையாகக்கொண்டு விரிவடைந்துள்ளது. பணிச்செயற்பாட்டு முகாமைத்துவம் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று நிறுவனங்களினூடாக ஒழுங்கமைந்துள்ளது.

1. Professional Conference Organization - PCO
2. Professional Exhibition Organization - PEO
3. Event Management Company

இந்நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெருமளவு தொழில்வாய்ப்புகள் உருவாகியுள்ளன. அதற்கேற்ப பணிச்செயற்பாட்டு முகாமைத்தவத்தின் தற்போதைய நிலை, எதிர்காலத்தில் அதன் முக்கியத்துவம் பற்றி புலமையாளர்கள் மத்தியில் விரிவான பார்வையினை ஏற்படுத்தியுள்ளது. அறிவு மையப்பொருளாதாரத்தை நோக்கி அடியெடுத்து வைக்கின்ற எதிகாலச் சந்ததியினர் பயிற்சிப்பெற்ற முயற்சியாண்மையாளர்களாகவும் தொழில் வாண்மையாளர்களாகவும் அபிவிருத்தியடைந்தால் இலங்கை சர்வதே நாடுகளுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பெருமளவில் பயனடைய முடியும்.

இப்பின்னணியில், பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழியில் மாத்திரம் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்ட பணிச்செயற்பாட்டு முகாமைத்துவப் பாடம் பதின்மூன்றாண்டுகள் உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைக் கல்வி முறைக்கு அறிமுகம் செய்யப்பட்டு, சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

க.பொ.த (சா/த) பரீட்சையின் பின்னர் பாடசாலையை விட்டுச்செல்லும் இளைஞர் யுவதிகளுக்கு தொடர்ந்தும் பதின்மூன்றாண்டுகள் கட்டாயக் கல்வியை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களிடத்தேயுள்ள ஆற்றல்களை விருத்தி செய்து, பயிற்றப்பட்ட பணியாளர்களாக தொழிற் சந்தையில் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதை இப்பாடத் திணூடாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்நோக்கத்தினை முன்னிறுத்தி, மாணவச்சமூகத்தினர் எதிர்காலத்தில் சிறந்த நற்பிரசைகளாகவும், நாட்டின் நிலைபேண் அபிவிருத்திக்கான பங்களிப்பினை பெற்றுக்கொடுப்பதற்கும் தேவையான கோட்பாட்டு ரீதியானதும் பிரயோக ரீதியானதுமான அனுபவங்களைக் கொண்டதாக பணிச்செயற்பாட்டு முகாமைத்துவக் கலைத்திட்டம் விருத்திசெய்யப்பட்டுள்ளது. தரம் 12 இல் இரண்டாம், மூன்றாம் தவணைகளுக்கென தலா 100 பாடவேளைகள் வீதம் உள்ளடங்கிய இரண்டு மொடியுல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.





தரம் 13 இல் இப்பாடத்தினைப் பிரதானப் பாடமாகத் தெரிவு செய்யும் அனைத்து மாணவர்களும் முழுநேர பிரயோகப் பயிற்சிக்காக யாதேனும் நிறுவனம் ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டு பின்னர் தேசிய தொழிற்றகைமை சான்றிதழான NVQ 4 சான்றிதழ் வழங்கப்படும்.

பணிச்செயற்பாட்டு முகாமைத்துவப் பாடம் தொடர்பில் NVQ 4சான்றிதழ்தாரிகள் தமது தொழில் வாண்மையினை அதிகரித்துக் கொள்வதற்காக உயர்கல்வியினைப் பெறுவதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பணிச்செயற்பாட்டு முகாமைத்துவப் பாடத்தின் உயர்கல்வி வாய்ப்புகள்

கல்வி நிறுவனங்களும் பாடநெறிகளும்

நிறுவனம்	பாடநெறி
தொழிநுட்ப பல்கலைக்கழகம், ரத்மலானை, மாத்தறை, பட்டங்கலை	பணிச்செயற்பாட்டு முகாமைத்துவ உயர் டிப்ளோமா (NVQ-6)
வணிக முகாமைத்துவ தேசிய பாடசாலை (NSBM) பசுமைப் பல்கலைக்கழகம்	பணிச்செயற்பாடுகள், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சேவை தொடர்பான விஞ்ஞான மாணி பட்டம் (Plymouth University,UK)
முகாமைத்துவ, விஞ்ஞானப் பல்கலைக்கழகம் (MSU)Colomb Campus	பணிச்செயற்பாட்டு முகாமைத்துவப் பட்டம்
இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனம் மாலபே (SLIIT)	பணிச்செயற்பாட்டு முகாமைத்துவ டிப்ளோமா

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி

1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப் பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப கல்வித்துறையில் பணியாற்றுகின்றோருக்கு பயிற்சியளிக்கும் பொறுப்பு தேசிய கல்வி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொழில் அபிவிருத்தியினை நிறைவேற்றும் பொருட்டு 1989 இல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றதொரு பாடநெறியாக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியினைக் குறிப்பிடலாம். தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர்க் கல்வித்துறையினால் நடாத்திச்செல்லப்படுகின்ற இப்பட்டப் பாடநெறியினை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவும் ஏற்றுக்கொண்டுள்ளது.

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட இளமாணிப்பட்டம்.

- அரச அல்லது அரச உதவிபெறும் பாடசாலை ஒன்றில் (Semi Govmment School)அல்லது பிரிவெனா/ அரச அனுமதிப் பெற்ற மதக் கல்வி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் அதிபராக (SLPS) அல்லது ஆசிரியராக (SLTES) அல்லது ஆலோசகராக (ISA) அல்லது இலங்கை ஆசிரியர் கல்வியி யலாளர் சேவை (SLTES) அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையில் (SLEAS) அதிகாரியாக இருத்தல் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் நிரந்தர உத்தியோகத்தராக இருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கல்விசார் ஊழியராக இருத்தல் வேண்டும்.

□நியமனத்திகதியில் இருந்து நிரந்தரமாகவும் தொடர்ச்சியாகவும் சேவையில் இருக்கின்ற, விண்ணப்ப முடிவுத் திகதியன்று 52 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

கல்வித்துறையில் பிரவேசிக்கின்ற புதுமுக பட்டதாரிகள் "பூகோள ரீதியாக ஏற்படுகின்ற மாறுதல்களுக்கு இசைவாக்கம் அடைவதோடு புதியக் கல்வி சீர்திருத்தங்களை அறிந்து கல்வித் தொகுதியின் தரமான அபிவிருத்திக்கு பங்களிப்பினை வழங்க வேண்டும். அதன்படி பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட-நெறியானது அச்சகலத் தேவைகளையும் நிறைவேற்றுவதோடு புதுமைகளுக்கு முன்னுரிமை அளித்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக உயர் கல்வி அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள "இலங்கை தகைமைசார் சட்டகம்" இற்கு ஏற்ப(Sri Lanka Qualification Framework) கலைத்திட்டம் மறுசீரமைக்கப் பட்டிருப்பதோடு, இப்பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்வோருக்கு இலங்கைத் தகைமைசார் சட்டகத்தின் எட்டாவது மட்டம் (SLQF 8) பெற்றுக்கொடுக்கப்படும். அதேநேரம் பாடநெறியின் அனைத்து அம்சங்களையும் நிறைவு செய்வோருக்கு தேசிய கல்வி நிறுவகத்தால் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் (PGDE) வழங்கப்படும்.

பாடநெறிக்கான தெரிவு போட்டிப்பரீட்சை அல்லது நேர்முகத் தேர்வின் மூலம் மட்டுமே இடம்பெறும். தெரிவுக்காக மேற் கொள்ளப்படும் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

- நுண்ணறிவுச் சோதனை (01 மணித்தியாலம்)
- கல்வித் தொடர்பான பொது அறிவு (02 மணித்தியாலங்கள்)

சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமாக முன்னெடுக்கப்படுகின்ற பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கையினை மேற் கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

பாடசாலைகளிலும், கல்விக் காரியாலயங்களிலும் பணியாற்றுகின்ற கற்றல் - கற்பித்தல் தொடர்பான தொழிற் தகைமையினைப் பெற்றிராத பட்டதாரி ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அதிகாரிகள் கல்வி மற்றும் தொழில் ரீதியான வாண்மையினைப் பெற்று துறைசார் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு இப்பாடநெறி வாய்ப்பளிக்கின்றது. பளிக்கின்றது. நாடளாவிய ரீதியில் 28 பிரதேச நிலையங் களில் பாடநெறியினை தொடர்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது. இது பகுதிநேர பாடநெறியாக இடம் பெறுவதோடு, வார இறுதி மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் கீழ் காணப்படும் பிரதேச நிலையங்களில் இடம்பெறும்.

1. மஹரகம
2. கம்பஹா
3. களுத்துறை
4. காலி
5. மாத்தறை
6. தங்காலை
7. கண்டி
8. மாத்தளை
9. பொலன்னறுவை
10. அநுராதபுரம்
11. எம்பிலிப்பிட்டி
12. இரத்தினபுரி
13. கேகாலை
14. பதுளை
15. மகியங்கனை
16. மொனராகலை
17. பண்டாரவளை
18. கெக்கிராவை
19. அம்பாறை
20. குளியாப்பிட்டி
21. குருணாகல்
22. நிக்கவெரட்டிய
23. சிலாபம்
24. அம்பாந்தோட்டை
25. பலாங்கொடை
26. பிபில
27. நுவரெலியா
28. பேராதனை

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியினைத் தொடர்வதற்கோ அல்லது அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவோ எதிர்பார்ப்பின் தேசிய இணைப்பாளர், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி, ஆசிரியர் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம என்ற முகவரிக்கு எழுத்து மூலமாகவும், 0117 – 601744 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டுத் தகவல்களைப் பெற முடியும்.

முதலாம் பக்கத்திலிருந்து...

தேசிய கல்வி நிறுவகத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Channel NIE எனும் வலைதள ஒளியலைவரிசை

2014 ஆம் ஆண்டு வரை இந்நிகழ்ச்சிகள் தேசிய தொலைக்காட்சி, சுயாதீன தொலைக்காட்சி, சுவர்ணவாஹினி மற்றும் டயலொக் TV ஆகிய தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது. எனினும் தற்பொழுது அவ்வொளிபரப்புகள் தொய்வடைந் துள்ளமையினால் அதற்குத் தீர்வினைத் தேடிய இலத்திரனியல் ஊடகத்துறை "வலைதள ஒளியலைவரி சையின் பயன்பாடு" தொடர்பில் தமது கவனத்தை செலுத்தியது. அதன்படி, தற்கால விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்ற கல்விசார் காணொலி நிகழ்ச்சிகளை இலங்கையிலுள்ள முழு மாணவர் சமூகத்தினரும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இணையப் பயன்படுத்தலாம் என சுட்டிக்காட்டப்பட்டதற்கிணங்க, தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவைப் பேரவையின் அனுமதியுடன் Channel NIE எனும் பெயரில் "வலைதள ஒளியலைவரிசை" ஒன்று உருவாக்கப்பட்டது. 2019 செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்ற சுப முகூர்த்தத்தில் தேசிய கல்வி நிறுவகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஐந்துமாடிக் கட்டிடத் தொகுதி கல்வி அமைச்சின் கௌரவ செயலாளர் நிஹால் ரணசிங்ஹ அவர்களால் திறந்து வைக்கப்பட்டதோடு Channel NIE அலை வரிசையில் முதலாவது நிகழ்ச்சி நிரல் தரவேற்றம் செய்யப்பட்டது.

பல்வேறு பாடங்களுடன் தொடர்புடைய உள்வாரியான மற்றும் வெளிவாரியான வளவாளர்களின் நேரடியான வளப்பங்களிப்பினை பெற்றுக்கொண்டு, கலைத்திட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு வகையில் வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சிகளை மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்லாது ஒட்டுமொத்த சமூகத்தினரும் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் Channel NIEமூலம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. கல்வித்துறையில் ஆழமான அறிவினைத் தேடிச்செல்லும் அனைவருக்கும் அறிவுத்தேடலில் ஈடுபடுவதற்கான வழியும் இதனூடாக திறந்துவிடப்பட்டுள்ளது.

கற்புலச் - செவிப்புல ஊடகங்களுக்கு மிகப்பொருத்தமான பாடங்களை அல்லது பாட அலகுகளை தெரிவு செய்து, கீழ்வரும் பிரதானப் பாடப்பரப்புகளுக்கான நிகழ்ச்சிகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

- விஞ்ஞானக்கல்வி தொடர்பான விசேட நிகழ்ச்சிகள்
- ஆரம்பக் கல்வித் தொடர்பான விசேட நிகழ்ச்சிகள்
- ஆசிரியர் கல்வி தொடர்பான விசேட நிகழ்ச்சிகள்
- தொழிநுட்பம் மற்றும் தொழிற்சார் பாடங்கள் தொடர்பான விசேட நிகழ்ச்சிகள்
- சுற்றாடற் கல்வி தொடர்பான விசேட நிகழ்ச்சிகள்

இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் உங்களுடைய வசதிக்கேற்ப இலவசமாக பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தினை Channel NIE ஏற்படுத்தியுள்ளது.

கலாநிதி சி. டப்ளியு. டப்ளியு கன்னங்கரா அவர்களின் 30 வது நினைவுப்பேருரை

"நாளைய உலகிற்காக, சிரேஷ்ட இடைநிலை மற்றும் கல்லூரி நிலை கலைத்திட்டங்கள் தொடர்பான புதியதோர் விளக்கம்"

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தித் துறையினால் 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற கலாநிதி சி. டப்ளியு டப்ளியு கன்னங்கரா நினைவுப்பேருரைத் தொடரின் 30 ஆவது உரை 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதி, தேசிய கல்வி நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர் நாயகமான டீ. ஏ பெரேரா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இம்முறை உரையில் "நாளைய உலகிற்காக, சிரேஷ்ட இடைநிலை மற்றும் கல்லூரி நிலை கலைத்திட்டங்கள் தொடர்பான புதியதோர் விளக்கம்" எனும் தொனிப்பொருளில் இலங்கைத் திறந்தப் பல்கலைக்கலகத்தின் கணிதத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி உபாலி மாம்பிடிய அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இலங்கையில் சிரேஷ்ட இடைநிலை மற்றும் கல்லூரி நிலைக் (Collegiate)கலைத்திட்டம் அதற்குரிய சர்வதேச அளவீடுகளுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டது. அதேபோல் மேற்குறித்த கல்வி நிலைகள் இரண்டிலும் செல்வாக்கு செலுத்தும் பிரதான இரண்டு பிரச்சினைகளாக மாணவர்களின் உள மற்றும் உடல் சுகாதாரத்தில் தீவிரமான செல்வாக்கினை ஏற்படுத்துகின்றதும், கல்வி தொடர்பான அழுத்தத்திற்கு காரணமாக அமைகின்றதும், அதிக எடையினைக் கொண்டதுமானக் கலைத்திட்டம் தொடர்பிலும் மற்றும் 21ஆம் நூற்றாண்டில் கல்விக் கற்போர் எதிர்நோக்கும் சவால்களுக்கு பொருந்தும் வகையிலும் பரந்தளவிலான ஆற்றல்களைப் பாடசாலைக் கலைத்திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறதா என்பது பற்றிக் கலந்துரையாடப்படுகிறது.

தேசிய ரீதியிலமைந்த நிறுவனங்களின் மூலம் கல்வித் தகைமைகளை ஏற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப் பட்டுள்ள தேவைகளும் பாடசாலையை விட்டு விலகும் பிள்ளைகளின் தேவைகளும் நிறைவேற்றப்படும் வகையில், 21 ஆம் நூற்றாண்டில் கல்விகற்கும் மாணவர்கள் எதிர்நோக்க வேண்டி வரும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கக் கூடிய மிகவும் பரந்தளவிலான ஆற்றல் தொதியினூடாக பாடசாலைக் கலைத்திட்டத்தை உயர்நிலைக்கு கொண்டுவருவதற்கு கைகொடுக்கும் பல ஆலோசனைகள் கலாநிதி உபாலி மாம்பிடிய அவர்களால் முன்வைக்கப்பட்டது.



இரண்டாம் பக்கத்திலிருந்து...

உத்தேசிக்கப்பட்ட பரிந்துரை களுக்கிணங்க 10 மற்றும் 11 ஆம் தர கணித பாடத்தினுள் இனங் காணப்பட்ட அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்கள் ஊடாகப் பிள்ளைகள் மதிப்பீட்டுக்குட் படுத்தப்படுவதோடு அது முதலாவது வினாப்பத்திரத்தில் நிறைவேற்றப்படுகிறது. எண்ணிக்கை, அளவீடுகள், கேத்திர கணிதம், அட்சர கணிதம், தொடைகளும் நிகழ்தகவும் மற்றும் புள்ளிவிபரவியல் ஆகிய மையத் தலைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடவிடயங்களுக்கும் சிற்சில வரையறைகளை விதிப்பதன் மூலம் இந்த அத்தியாவசியக் கற்றல் எண்ணக்கருக்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இங்கு பிள்ளைகளுக்குக் கிட்டுகின்ற நன்மைகளாவன, தெரிந்தெடுத்த பாடவிடயங்களின் துணையோடு அறிவு மற்றும் திறன்கள், தொடர்பாடலும் தொடர்புகளை காணலும் எனும் ஆற்றல்களை மட்டுமே அளப்பதற்கேற்ற விதத்தில் வினாக்கள் தயாரிக்கப் பட்டுள்ளமையாகும். அவ்வாறே இவ்விதம் இனங்காணப்பட்ட பாடவிடயங்களில் சிற்சில பாடவரையறை விதிக்கப்பட்டிருப்பதுவும், பிரச்சினை தீர்த்தலின்போது பிள்ளைகளுக்கு வசதியை ஏற்படுத்தியுள்ளது. முதலாவது பத்திரத்தினூடாக பிள்ளைகளின் உயர் உள ஆற்றல்களை அளவிடுவதை எதிர்பார்க்கப்படாததோடு இதன் வழியாக மொத்தப் புள்ளிகளின் 50% பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விதமாக சாதாரண தர கணித பாட வினாப்பத்திர சித்திக்கான புள்ளி 35% கருதப்படுமாயின் முதலாவது வினாப் பத்திரத்துக்கு 70% ஐ (இது அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களில் அடிப்படை அடைவு மட்டமாக கருதப்பட வேண்டும்.) பெற்றுக் கொள்ள எந்தவொரு பிள்ளைக்கும் 2வது வினாப்பத்திரத்துக்கு புள்ளிகள் எதையும் பெறமுடியாது போனாலும் கணிதத்தில் சித்தி புள்ளியைப் பூரணப்படுத்திட முடியும். அவ்வாறே 2ம் வினாப்பத்திரத்தினால் 10–11 தரங்களின் முழுப் பாடத்திட்டத்தையும் மதிப்பீட்டுக்குள்ளாக்குவதோடு அதன் வழியாக அதற்கு சிறப்பாக முகங்கொடுப்பதனால் பிள்ளைகளின் அடைவினை மேலும் உயர்த்திட முடியும்.

பாடநெறி தொடர்பான வளப்பங்களிப்பினை ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி துறையின் கல்வி சார்சபையினர் தலைமையிலான கல்வித்துறையில் தேர்ச்சிமிக்க கல்வியியலாளர்கள் குழுவினால் வழங்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டுக்கான கல்வி ஆய்வுகள் கருப்பொருள் பாடநெறிகள் இரண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, இம்முறைக் கருப்பொருளாக அமைந்தது "தரவுகள் பகுப்பாய்வு" ஆகும். முதலாவது கருப்பொருள் பாடநெறி 2020 மார்ச் மாதம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளப்படும் பலுனர்களின் எண்ணிக்கை மிகவும் வரையறை செய்யப்பட்டிருப்பதோடு, 2020 ஜனவரி மாதத்தில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும். இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ளோர் மேலதிக தகவல்களை நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வி ஆய்வுகள் சஞ்சிகைக்கான ஆக்கங்களைப் பெற்றுக்கொள்ளல்

ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி துறையினால் வருடாந்தம் வெளியிடப்படும் இலங்கை கல்வியியல் ஆய்வு சஞ்சிகை (சிங்களம்/ ஆங்கிலம்), சாக் கல்வி ஆய்வுகள் சஞ்சிகை ஆகியவற்றுக்கு 2020 ஆண்டுக்கான ஆக்கங்களை சேகரிக்கும் பணி தற்போது ஆரம்பிக்கட்டுள்ளது. சிங்கள மொழி மூலமான கல்வி ஆய்வுகள் தொடர்பான சஞ்சிகைக்கான ஆக்கங்கள் சிங்கள மொழியிலும் ஆங்கில மொழி மூலமான கல்வி ஆய்வுகள் தொடர்பான சஞ்சிகைக்கான ஆக்கங்கள் ஆங்கில மொழியிலும், சாக் கல்வி ஆய்வுகள் தொடர்பான சஞ்சிகைக்கு ஆங்கில மொழியிலும் ஆக்கங்களை வழங்க முடியும். கல்வித் துறையில் ஆய்வில் ஈடுபடும் உங்களுக்கு ஆய்வு முடிவுகளை வெளியிடுவதற்கு இது பேருதவியாக இருக்கும். மேற்குறித்த சஞ்சிகைகளுக்கான ஆக்கங்களை வழங்கவிருப்பின் அது பற்றிய மேலதிக தகவல்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகர்வ இணையதள முகவரியான www.nie.lk ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வி ஆய்வுகளுக்கான இரண்டு கருப்பொருள் பாடநெறிகள்

கல்வித்துறையில் ஆய்வு செயற்பாடுகளில் ஈடுபடும் உங்களது ஆய்வு தொடரபான அறிவனை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தித் துறையினால் வருடாந்தம் ஆய்வுத் தலைப்புகள் தொடரபான இரண்டு பாடநெறிகள் நடாத்தப்படும். இருநாள் செயலமர்வுகளாக இடம்பெறும் இப்பாடநெறியினூடாக ஆய்வுத்துறைக்குரிய தலைப்பு தொடரபில் மிகவும் ஆழமானதும் கோட்பாட்டு ரீதியானதுமான அறிவினை பிரயோக ரீதியான பயிற்சியுடன் பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு வாய்ப்பேற்படுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிலும் " ஆய்வு முன்மொழிவுகளை எழுதல்" மற்றும் "இலக்கிய மீளாய்வு" எனும் தலைப்பில் கருப்பொருள் பாடநெறிகள் இரண்டு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு ஆய்வு செயன்முறையில் ஈடுபடும் ஆய்வாளர்கள் அறுபது பேருக்கு இப்பாடநெறிகள் இரண்டினூடாக விளக்கமும் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

செய்திமடல் NEWSLETTER பங்களிப்பு

ஆலோசனை வழிகாட்டல்
கலாநிதி சுபந்தி குணசேகர –பணிப்பாளர் நாயகம்

மேற்பார்வை
கலாநிதி தயாநந்த கெப்பெட்டிகொட - பணிப்பாளர்

பிரதம பதிப்பாசிரியர்
கே. ஏ. என் கலோசனா எலெக்சென்டர்
- சிரேஷ்ட விரிவுரையாளர்

தொகுப்பாளர் குழு.
1. டப்ளியு. கே. சிறாணி புஷ்பமாலா - சிரேஷ்ட விரிவுரையாளர்
2. டி. ஜெட்டிகே - விரிவுரையாளர்
3. என். டி. திசாநாயக - சிரேஷ்ட விரிவுரையாளர்
4. எம். டி. டி. ஞரானி த சில்வா - உதவி கல்வியியலாளர்

வெளிவாரியான வளப்பங்களிப்பு
ஜே. கே. அசேல கெலும் - ஊடக இணைப்பாளர்
சஷி நிரஞ்சலா கமகே - ஊடக இணைப்பாளர்

கட்டுரைகள் மற்றும் ஆக்கங்களை வழங்கியோர்.
ஆய்வுகள் துறை
இலத்திரனியல் ஊடகத்துறை
கணிதத் துறை
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் துறை
நிறுவன அபிவிருத்தி துறை
சமூக விஞ்ஞானங்கள் துறை
ஆசிரியர் கல்வித்துறை

மொழிப்பெயர்ப்பு
பீ. எஸ். மோஹன் - ஆசிரிய சேவை

கணினி வரைபட வடிவமைப்பு
ரீ. டப்ளியு. ஊ சஞ்சீவ